**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.113/2023</u>**

பெயர்–திரு.செல்வகுமார் நாள்.12.02.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 1, 2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் B.E. படித்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் 3–ம் பிரதிவாதி துரைசாமியின் தகப்பனார் முத்துவிற்கு பாத்தியப்பட்டது. முத்து துரைசாமிக்கு தனியாக உயில் எழுதி வைத்துள்ளாரா என்றால், இல்லை. முத்துவிற்கு துரைசாமி மட்டுமே ஒரே வாரிசுதான். 1, 2 பிரதிவாதிகள் 3–ம் பிரதிவாதிக்கு என்ன உறவு முறை என்றால், சின்னம்மாள் மகள் ஆவார்கள். ஆனால், என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் 3–ம் பிரதிவாதியின் சகோதரிகள் 1,2 பிரதிவாதிகள் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சின்னம்மாள் மகள் என குறிப்பிடவில்லை. சின்னம்மா என்றால், முத்துவின் 2–ம் மனைவியா என்றால், எனக்கு தெரியாது. தற்போது 1,2 பிரதிவாதிகள் முத்துவின் 2–வது மனைவியின் மகள்கள் என கூறுகிறார்கள். நான் தாவா சொத்தை 3–ம் பிரதிவாதியிடம் 30.11.2017–ல் கிரையம் பெற்றேன் என்றால், சரிதான். வழக்கு சொத்திற்கு அருகில் எனக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால், சரிதான். நான் கிரையம் வாங்கும் முன்பே, 3–ம் பிரதிவாதியின் மீது 1, 2 பிரதிவாதிகள் மாண்பமை சத்தியமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கேட்டு அ.வ.எண்.61/2017–ல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால், எனக்கு தெரியாது. அ.வ.எண்.61/2017–ல் தீர்ப்பு ஏற்பட்ட பிறகு மேற்படி தாவா சொத்தை பாகப்பிரிவினை பிரித்துக் கொடுக்க கோரி இறுதிநிலை தீர்ப்பாணை மனு 608/2018 என தாக்கல் செய்து, அதில் நான் 2–ம் எதிர்மனுதாரராக சேர்த்துள்ளார்கள் என்றால், சரிதான். மேற்படி மனுவில் நான் வழக்கறிஞர் வைத்து ஆஜராகியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி மனுவில் ஏற்பட்ட உத்தரவின் பெயரில், நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை வந்து அளந்து,அறிக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால், இல்லை. எனது வழக்கறிஞர் வழக்கு பொய்யானது என நடத்தாமல் விட்டுவிட்டார். மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு, 3 பாகங்களாக பிரித்து ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையினை நிறைவேற்றக் கோரி சுவாதீனத்தை கேட்டு நி.ம.எண்.57/2025 தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி நிறைவேற்று மனுவில் எனது வழக்கறிஞர் ஆஜராகி நடத்தி வருகிறார் என்றால், சரிதான்.

**சாட்சி தற்போது இறுதிநிலை தீர்ப்பாணை பற்றி தெரியாது எனவும், ( வழக்கறிஞர் காண்பிக்கும் ஆவணங்களை பார்த்து பதில் சொல்ல மறுக்கிறார் )**

என்னிடம் காட்டப்படும் ஆவணம் நிறைவேற்று மனு எண்.57/2025–ன் மனுவின் நகல் என்றால், சரிதான். மேற்படி மனு எனக்கு சார்பு செய்யப்பட்டுள்ளது இன்னும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. மாண்பமை சத்தியமங்கலம் சார்பு நீதிமன்ற நி.ம.எண்.57/2025 **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து 3 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. 3–ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது. 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை மறைத்து, 3–ம் பிரதிவாதியிடம் இருந்து மட்டும் கிரையம் பெற்றது செல்லாது என்றால், சரியல்ல. எனவே, எனது கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல. 3–ம் பிரதிவாதியின் தந்தை முத்துவின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழை என்னிடம் காண்பித்தாரா என்றால், இறப்பு சான்றிதழ் காண்பித்தார், வாரிசு சான்திறழ் என்னிடம் காட்டவில்லை. 3–ம் பிரதிவாதியை நீண்ட காலமாக தெரியும் என்பதால், முத்துவின் வாரிசு என எனக்கு நன்கு தெரியும். வழக்கு சொத்தினை தவறான ஆவணங்களின் அடிப்படையில் கிரையம் பெற்றுள்ளதால்,எனது ஆவணம் செல்லாது என்றாலும், நான் தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றாலும், சரியல்ல. நான் எனது பெயரில் தாவா சொத்திற்கு பட்டா மாறுதல் பெற்றுவிட்டேனா என்றால், பெற்றுவிட்டேன். முத்துவின் வாரிசுகளை விசாரிக்காமல் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எனது கிரைய பத்திரத்தின் அடிப்படையில்தான் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனவே, எனது செல்லாத கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பட்டா மாறுதல் பெற்றது செல்லாது என்றால், சரியல்ல. தாவா சொத்தைப் பற்றிய அனைத்து விவரங்களையும் தெரிந்து, இவ்வழக்கை பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் மாண்பமை சார்புநீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வாதம் தாக்கல் செய்து, சாட்சியம் அளித்துள்ளேனா என்றால், இல்லை. எனவே, வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.12 18:56:45 +0530

District Munsif